உ

கணபதி துணை.

மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

சிவஞானபோதமும்

கைலாசபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து

சிவஞானசுவாமிகள்

செய்தருளிய

திராவிடமாபாடியம்

எனவழங்கும்

சிவஞானபாஷ்யமும்.

முதற்சங்கியை.

இஃது
சி. பொன்னம்பலதேசிகரால்
யாழ்ப்பாணம்
விவேகாநந்த யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

கலியப்தம் ௫௦௦௦

விலை ரூபா அரை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திராவிடமாபாடியம்

எனப்படும்

சிவஞானபாஷ்யம்.

மங்கலவாழ்த்து.

சைவாகமங்களுண் ஞானபாதப்பொருளினிகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தற்கு ரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோதநூலினைத் தமிழுலகமுய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைப்பானெடுத்துக்கொண்ட வாசிரியர், சாக்கிரத்தே யதிதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை யறிந்தாராயினும், ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும் மாணாக்கர்க் கறிவுறுத்தற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்புரைத்தலுமென மங்கலவாழ்த்து மூவகைப்படும். அவற்றுளிது பொருளியல்புரைத்தலெனக் கொள்க.

கல்லா னிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே. எனவரும்.

நந்திபெருமானுக்கு இந்நூலறிவுறுத்தருளிய முதலாசிரியரென்பதுணர்த்துதற்குக் கல்லானிழலென இடங் கூறினார். ஆண்டெழுந்தருளியிருந்து, சிவாகமப்பொருள்களொன்றோடொன்று முரணுவனவாக மலைந்து வினவிய நந்திபெருமானுக்கு, இந்நூலான் மலைவுதீர்த்தருளினாரென்பார், மலைவில்லாரென்றார். இல்லார் இல்லாகச் செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர். இனி, மலைவில்லாரென்பது மேருவை வில்லாகவுடையரெனக்கொண்டு, கல்லானிழ

விலெழுந்தருளியிருந்து வீடுபேறும் மலையை வில்லாகவளைத்துப் பகைவரைவென்று போகமும் அளித்தருளியோரெனினுமமையும். எனவே ஐந்தொழிற்கும் வினைமுதலென்றவாறாயிற்று.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டுவினையெச்சம்; உண்ணியபுகிலென்றாற்போல. அதுபுனைவரென்னும் பிறவினைமுதல்வினைகொண்டு முடிந்தது. அருளுதல், புனைந்தமைபற்றிக் கல்லானிழலில் வீற்றிருந்து மலைவு தீர்த்தருளியவாசிரியர் கருணைமிக்கூர்தல். அருளிய பொல்லாரெனப் பெயரெச்சமுடிபாக வைத்துரைத்தலுமொன்று.

பொள்ளார் பொல்லாரென மரீஇயிற்று: சுயம்புமூர்த்தியென்றதாம்.

இணைமலர் பண்புத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய்த் திருவடியையுணர்த்திற்று. இணையென்பதனைத் திருவடிக்கு அடையாக்கி இருபெயரொட்டாகுபெயரென்றலுமொன்று. இவற்றியல்பெல்லாம் சூத்திரவிருத்தியுளுரைத்தாம். ஆண்டுக்காண்க. புனைவரென்றதற்கேற்பத் திருவடியை மலராகவுருவகஞ்செய்தாரென்றலுமொன்று.

நல்லார் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த முதியோர். புனைதல் தாடலைபோலடங்கிநிற்றல். ஏகாரமீற்றசை. தேற்றமெனினுமமையும்.

இப்பாட்டு வஞ்சித்துறை. இது கல்லென்பது முதல் ஏயென்பதிறுவாய்ப் பன்னிருசொற்களாற் கூறவே, இந்நூல் பன்னிரு சூத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுள் மும்மூன்று சொற்கள் ஒவ்வோரடியாக வைத்து நான்கடியாகக் கூறவே, இந்நூலும் அவற்றுள் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக வைத்து நான்கியலாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுள் முன்னீரடியுமொருவினைமுடிபும் பின்னீரடியும் பிறிதோர்வினைமுடிபுமாகவிருவகைப்படுத்துச் செய்யவே, முன்னாறு சூத்திரமோரதிகாரமும் பின்னாறுசூத்திரம் வேறோரதிகாரமுமாக இந்நூலிரண்டதிகாரத்தாற் செய்யப்பட்டதெனவும், குறிப்பானுணர்த்தியவாறு காண்க. இரண்டாமோத்தின் முதற்சூத்திரம் இதுவுமதுவென முதலோத்தினிறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படுவதென்பதனை யுணர்த்

துதற்கு மலேவென்பதனை யிரடியுஞ் சாரவைத்தார். தல்லார் னிழலெ
ன முதலடியினிடங்கூறவே முதலோத்துப் பிரமாணங் கூறுவதெ
ன்பதூஉம், இரண்டாமடியின் மலேவில்லாரருளியவெனச் செய்கை
கூறவே இரண்டாமோத்து இலக்கணங் கூறுவதென்பதூஉம், மூன்
ரூமடியிற் பொல்லாரிணேமலரெனத் திருவடி கூறவே மூன்ருமோ
த்துச் சாதனங்கூறுவதென்பதூஉம், நான்காமடியில் நல்லார் புனே
வரெனப் பேறுகூறவே நான்காமோத்துப் பயன் கூறுவதென்ப
தூஉம், குறிப்பாற் பெறப்படும். பிறவு மிவ்வாருேர்ந்துணர்க. இங்ங
னம் நூனுதல் பொருளெல்லாம் குறிப்பாற்றன்னகத்தடக்கி நிற்ற
ல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க. இவ்வாறு நால்வ
கைப்படுத்தோதியது இந்நூலென்பது "ஈண்டளவும் பொருளியல்
பும் வேண்டுஞ் செய்தி முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்
லாம்" என்று வழிநூலாசிரியர் வகுத்தோதியவாற்ருனுங் கண்டு
கொள்க.

மங்கலவாழ்த்து முடிந்தது.

அவையடக்கம்.

மங்கலவாழ்த்துக் கூறுமுகத்தான் ஈண்டைக்கிறைவனுவான் இவனென்பதுணர்த்தி, இனி அவையடக்கங் கூறுமுகத்தான் அவ்விறைவனுவியம்பப்படு நூலுணர்ந்தாரதுயர்பும் ஏனேச் சமய நூலுணர்ந்தாரதிழ்பும் உணர்த்துகின்ருர்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன். எனவரும்.

உணர்ந்தெனவே குருமுகத்தாற் கேட்கப்படுஞ் சிவாகமநூல்பற்றியெ
பது வருவித்துரைத்துக் கொள்ளப்படும். தம்மையுடையதன்னெனவே தா
ந் தலைவனுக்குடைப்பொருளென்பதூஉம், எம்மையுடைமையெனவே யா
ந்தமக்குடைப்பொருளென்பதூஉம், பெறப்பட்டன. உடைப்பொருள் அடி
மையுமுடைமையுமென இருவகைப்படும். அவற்றுள் உயிர்வருக்கமெல்
லாமிறைவனுக்கு அடிமையெனவும், மாயை கன்மங்களு மவற்றின் காரிய
ங்களுமுடைமையெனவும் உணர்ந்துகொள்க. தன்னுணர்வாரென்புழி இர
ண்டனுருபு விகாரத்தாற்ருெக்கது. உடைமையினென எதுப்பொருட்கண்

வரும் இன்னுருபும் புணராமையானென்னும் ஆனுருபும் தொக்குநின்றன. எமையிகழாரென்பது எம்மைக் குற்றங்கணிக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவாரன்றி இகழ்தல் செய்யாரென்க. எனவே, எம்மாற் செய்யப்படுநூலையுமவ்வாறு கைக்கொள்வரென்பது குறிப்பெச்சம். தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வாரெனவே, தம்மையுணர்ந்தன்றித் தலைவனையுணர்தல் கூடாதென்பது பெற்றாம். அற்றேல் "தன்னாலே தனையறிந்தாற் றன்னையுந்தானே காணும்" எ-ம். "அதிலறிவடங்கி மன்னிடலியாபியாய வான் பயன்றோன்றும்" எ-ம். தலைவனையுணர்ந்தன்றித் தமையுணர்தல் கூடாதென்னுஞ் சார்புநூல் இதனோடு முரணும் பிறவெனின், — முரணாது. அஃதாண்டுச் சிவரூபத்தான் ஆன்ம தரிசனமும் சிவதரிசனத்தால் ஆன்ம சுத்தியுமாமாறு கூறிற்றெனவும், இது ஆன்மசுத்திப் பின் சிவப்பேறுமாறுணர்த்துகின்றதெனவும் தெரிந்துகொள்ளப்படுமாகலின். அரன்றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணுமென்பதனோடு முரணாமையு மிவ்வாறே யுணர்ந்துகொள்க. இதனானே, தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வாராவார் ஆன்மலாபப் பேறுடையாரென்பது பெற்றாம். அவர் சிவமயமேயாகலின் எம்மையுடைமையென்றார். உடைமை உடையராந்தன்மை. எம்மையுடைமையென இரண்டாவது குறிப்புப்பெயர்கோடல் அமையுமென்பது, "இரண்டாகுவதே" யென்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் புகழையுடைமையென உதாரணங் காட்டி யாப்புறுத்தலையானுமறிக. தம்மையுணராரெனப் பொதுப்படக்கூறுதலானே, தாமொருபொருளுண்டென்பதேயுணராத உலோகாயதரும், தம்மைக்குணிப்பொருளென்றுணராத புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு அடிமையென்றுணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவிதசைவரும் தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள், உடையானல்லாதானை உடையானென மயங்கிக் கோடலானும் உடையானுக்குப் பரிணாமங்கூறுதலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங்கூறுதலானும், பிறவாற்றானும், அவரும் தம்மையுணராரெனக்கொள்க. தம்மையுணர்ந்து தன்னுணர்வாரெனவே, தம்மையுணரார் தன்னுணராரென்பது தானேபோதருமென்பதுபற்றி உணராரென்றொழிந்தார். முன்னின்றவுணரார் எதிர்மறைவினைப்பெயர். அவர் உடங்கியைந்து தம்மிற் புணராமையாவது, பிறவிக்குருடர் பலர் குழீஇக்கொண்டு வேழங்காண்டல்விருப்பான் அது நின்றுழிச்சென்று கையினாலொவ்வோருறுப்பினைத் தைவந்து வேழமாவது முறம்போல்வதெனவும் உரல்போல்வதெனவும் உலக்கைபோல்வதெனவும் மலைபோல்வதெனவும் தம்முண் மாறுகொண்டொருவரையொருவர் மறுத்துக் கலாம் விளைத்தல்போல், சித்தாந்த நெறிநின்ற ஆசான்றிருவருள் பெறாதார் தத்தமுணர்விற்கேற்பச் சமயநூல்களின் ஒவ்வொன்றனை ஆராய்ந்து அவற்றிற் கூறும் ஏகதேசப்பொருள்களைப் பற்றிக்கூறி ஒருவரையொருவர் மறுத்துத் தம்முண் மாறுகொண்டு கலாம்விளைத்தல். அங்ஙனம் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையானொருவனோக்கி, இவர் செவிமுதலிய ஓரோருறுப்புக்களைப்பற்றிக் கூறிக் கலாம் விளைக்கின்றாரென

வும் வேழத்தினியல்பு வேறெனவும் தெரிந்துணர்ந்து அவர்க்கு அதையுணர்த்தலுறில், கொடிறும் பேதையும் போலத் தாங்கொண்டதேபற்றி அவனையுந் தம்முளொருவனாக வைத்து இழித்துக் கூறுமாறு கோடலேயன்றிப் பொருளெனக் கொள்ளமாட்டார். அதுபற்றியவன் வெருளாது இவரியல்பிதுவென நகையாடியொழிந்துவிடும். அதுபோல, ஒவ்வொரு சமயநூல்பற்றி அங்ஙனம் பிணங்குவாரை அவையெல்லாம் ஒவ்வோரேகதேச விஷயம்பற்றிக் கூறினவாகலான் அவைபற்றிப் பிணங்கற்கவெனவும் பொருட்டன்மை வேறெனவும் யாமிந்நூலானுணர்த்தப்புகின், அவரதனைக் கொள்ளமாட்டாது பயிற்சிவயத்தால் தாங்கொண்டதேபற்றி எம்மையுந் தம்முளொருவராக வைத்து இகழ்ந்துரைப்பாராகலின், அவ்வழியவர் வெள்ளறிவிதுவென்று ஒழிவதேயன்றி அதனைக்கொள்ளாமென்பார் கேளாம்புறமென்றார். கேட்டல்—பொருளாகக் கோடல். அது 'ஊறுகேளாது' என்பதனானும் 'கேளாரும்வேட்பமொழிவதாம்' என்பதனானுமறிக. புறன் புறச்சமயம்பற்றியிகழ்ந்துரைக்குமொழியும் புறங்கூற்றுமொழியுமென்பது இரட்டுறமொழிதலாற் கொள்க. புறங்கூற்றுமொழியாவது புறச்சமயங்களல்லாத பாஷாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தேயிகழ்ந்து கூறும் மொழி.

இச்சமயங்களெல்லாம் புறப்புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமும் அகச்சமயமுமென நான்குவகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உலோகாயதம் நால்வகைப்பௌத்தம் ஆருகதமென அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம் மீமாஞ்சை ஏகான்மவாதம் சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரமென அறுவகைப்படும். அகப்புறச்சமயம் பாசுபதம் மாவிரதம் காபாலம் வாமம் வைரவம் அயிக்கவாதசைவமென அறுவகைப்படும். அகச்சமயம் பாஷாணவாதசைவமுதற் சிவாத்துவிதசைவமீறாக அறுவகைப்படும். இவையெல்லாம் அகம் புறமென்றிரண்டாயடக்குமாறுமோர்ந்துணர்க. இவ்வாறிரண்டாயடக்கியும் அவற்றைத் தம்முள் வேறுபாடுநோக்கி நான்காக வகுத்துக்கூறுதலும் அமையுமென்பது, தொல்காப்பியத்தின் அகம் புறமென்றிரண்டாயடக்கிக் கூறிய பொருளைத் தம்முண் வேறுபாடுநோக்கிப் பன்னிருபடலத்தின் அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என நான்காகப் பகுத்தோதியவாற்றானுமுணர்க. இஃதறியாதார், தொல்காப்பியமும் பன்னிருபடலமுந் தம்முண் முரணுவனவாகக் கருதி, அவற்றுளொருநூலையேபற்றி மற்றொன்றனையிகழ்வர். ஈண்டுக்கூறிய சமயத்தாருள், உலோகாயதர் முதல ஆருகதரீறாகியவறுவரும், வேதஞ் சிவாகமமிரண்டனையும் நிந்திக்கு நாத்திகராயினும், ஒருநூலென்றும் பிரமாணமென்றுங்கொண்டு ஒருநெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப்புறச்சமயமெனவைத்தெண்ணப்பட்டன; தார்க்கிகர் முதற் பாஞ்சராத்திரிகளீறாகிய அறுவரும், வேதம் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருட் டார்க்கிகர் தன்னாற் பிராமாணியங் கொள்ளாமையானும், வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை

யிகழ்தலானும், ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைமூவரும் வேதவாக்கியங்களில் தத்தமதத்திற்குப் பொருந்துவனமாத்திரையேயெடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங்கொள்ளாமையானும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும், இவ்வறுவருஞ் சிவாகம நிந்தகராகலானும், இவர் சமயம் புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன. பாசுபதர் முதலியவைவரும், வேதஞ்சிவாகமமிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதமுதலிய நூல்கட்குச் சிறப்புவகையாற் பிரமாணங் கோடலானும், வேதஞ்சிவாகமமிரண்டினும் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கியவாதசைவர் வேதஞ்சிவாகமமிரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றின் விலக்கியனவொழித்து விதித்தவழியொழுகுவாராயினும், எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனுண்மை சாதிக்குஞ் சிவாகமவாக்கியங்களை இகழ்தலானும், அவ்வறுவகைச்சமயமும் அகப்புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன. ஏனைப்பாஷாணவாதசைவர் முதலிய அறுவரும் பொருளுண்மையெல்லாஞ் சித்தாந்தசைவரோடொப்பக் கொள்ளும் அந்தரங்கவுரிமையுடையராயினும், அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர்சமயம் அகச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன. இவ்வாறு நால்வகைச் சமயங்கட்குஞ் சித்தாந்தசைவத்தோடுளதாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

அகச்சமயமாறனுட் சிவாத்துவித சைவமாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவதாகலின், அது நிமித்தகாரண பரிணாமவாதமெனவுங் கூறப்படும். அங்ஙனங்கொண்ட சிவாத்துவித வியல்பறியாதார் சிவாத்துவித சைவமாவது யாதோவெனவும் "நிகழ்சிவாத்துவிதாந்தத்துக் குலவினர்" என்றமையின் இறுதிக்கண்ணெடுத்தோதப்பட்டுஞ் சுத்தசைவம்போலுமெனவும் மயங்குப. சுத்தசைவம் நுட்பப்பொருளுணராமைமாத்திரையேபற்றி வேறுவைக்கப்பட்டதன்றிக் கருத்துவகையாற் சித்தாந்தசைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவஞ் சித்தாந்தசைவத்துளடங்குமென்றுணர்க. அற்றாகலினன்றே நிலவுலோகாயதாதி நிகழ் சிவாத்துவிதாந்தத்துக்குலவினராளவளாவாக் கொள்கையதாகி என ஏனைச்சமயங்களையெடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்காதொழிந்ததூஉமென்க.

இனியிவ்வாறன்றிப் பாஷாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேறுபாடு சிறிதாகலினவ்விரண்டனையுமொன்றாக வைத்தெண்ணிச் சுத்தசைவத்தையுமுடன்கூட்டி அகச்சமயமாறெனக் கோடலுமொன்று. இங்ஙனமாகலான் மெய்தருசைவமாதியிருமூன்றுமென்றதூஉம் பாஷாணவாதமுதலியவறுவகைச் சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர்முதலியோர் கலைக்குமேலுள்ள தத்துவங்களையுணராமையின் அவர் வித்தையாதியெ

ய்து தத்துவங்களையவரெனக் கோடல் பொருந்தாமையறிக. அபிக்கவாதசைவர் சலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொள்ளாராயினும் மூலமலமுண்டென்பதறியாமையின் மூலமல நீங்கிய முத்தர்க்கன்றிச் சுத்ததத்துவ புவனங்களினெய்துதல் கூடாமையின் அவர்க்கு முத்தித்தானம் மோகினிக்குமேற் சுத்தவித்தைக்குக்கீழ் விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாமாகலின், எனைப்பாஷாணவாதசைவர்முதலியோரே வித்தையாதித்துவங்களையவரென்றறிக. 'புறச்சமயத்தவர்க்கிருளா யகச்சமயத்தொளியா' யென்புழியும் அகச்சமயமென்றது, "ஏகனநேகனிருள்கருமமாயையிரண்டு" என்னும் ஆறுபொருளுங்கொண்ட பாடாணவாதமுதலிய வறுவகைச் சைவங்களையேயாமெனவும், புறச்சமயமென்றது அங்ஙனம் பொருளுண்மை கொள்ளாத எனைமூவகைப்புறச்சமயங்களையுமெனவும் உணர்ந்துகொள்க.

புறப்புறச்சமயம்.

[உலோகாயதம்.]

புறப்புறச்சமயமாறனுள் உலோகாயதமாவது,—காண்டலளவையொன்றேபிரமாணம், காணப்படும் நிலம் நீர் தீ வளியென நான்கே தத்துவங்கள், இவை நித்தப்பொருள்கள், இவற்றின் கூட்டமே யுடம்பு, பாக்கடையுஞ் சுண்ணம்புங் கூடியவழிச் செவ்வண்ணம் பிறக்குமாறுபோல இவற்றின் கூட்டரவினோருணர்வுண்டாம், அவ்வுணர்வு உடம்பு வளரவளரும் தேயத்தேயுமாகலின் உடம்பிற்குவேறேயுயிரென்பதும் பொய், உடம்பிற்கு இன்பத்துன்பங்களியல்பாயுள்ளன, இவற்றிக்குக்காரணம் வினையென்பதும் பொய், மயிலைச் சித்திரித்தாரையும் குயிலைக் கூவுவித்தாரையுங்காணாமையிற் கடவுளுண்டென்பதும் பொய், இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்துண்டுடுத்து வாழ்வதே துறக்கவின்பம், அது பெறாது பகைவரால் நோயால் வறுமையால் நூல்களாற் பிறவற்றால் வருந்துவதே நிரயத்துன்பம், வேறே துறக்க நிரயமுளவென்பதும் பொய், நான்கு பூதக்கூட்டரவிற் பிராணவாயுவொன்று நீங்கில் உணர்விழந்து உடம்பு நாசமாம், அதுவே வீடுபேறு, வேறேவீடுபேறுண்டென்பதும் பொய், இவ்வுண்மையுணராத மடவோர் மறுமையுண்டெனக்கொண்டு தவங்கள் பட்டினிமுதலியவற்றான் வருந்துவர், கந்பமுதலிய சங்கேத நூல்கள் மதுகையின்றி மதியுடையோராற் செய்யப்பட்டன, பொன் நிலம் உணவு முதலிய தானங்களை யுயர்த்துக் கூறுநூல்கள் பசியான் வருந்தி நல்கூர்ந்தோராற் செய்யப்பட்டன, தேவதலம் தண்ணீர்ப்பந்தர் கூவல் பொய்கை சோலை முதலியன செய்தலையுயர்த்துக் கூறுநூல்கள் வழிச்செல்வோராற் கூறப்பட்டன, ஆகலான் இவற்றைக்கைவிட்டு உழவு பசுக்காவல் வாணிகம் செங்கோன்முறைமை முதலியவர்க ஆன்றோர் காட்டிய நெறியினின்று இம்மையின்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம். உலோகாயதநூல் செய்தோன் பிரகற்பதியென்றுணர்க. இவ்வுலோகாயதர் தேகான்மவாதிகளும் இந்திரியான்மவாதிகளும் பிராணான்மவாதிகளும் அந்தக்கரணான்மவாதிகளுமெனப் பலதிறப்படுவர்.

[புத்தம்.]

இனிப் புத்தமாவது—உலகத்துப் பிறந்திறந்துழன்று சிலமுதலியவற்றால் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப்போற் பிறருமுணர்ந்துய்தற்பொருட்டுக் கருணையினாற் பிடகநூல் செய்தவன் புத்தக்கடவுள், அந்நூலிற் கூறும் பொருளாவன ஞானமே ஆன்மாவெனப்படும்; அது நீரோட்டம்போலச் சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றியழியும், அங்ஙனந் தோன்றியழியுங்கால் மான்மத நாற்றம்போல முதற்கணத்தின் அழிவெய்து ஞானத்திற்றோன்றிய வாசனை பிற்கணத்திற்றோன்றும் ஞானத்திற் பற்றுதலான் அறிவுமுதலாயின நிகழும், மற்றுமுளபொருளுமெல்லாங் கணந்தோறுந் தோன்றியழியும், இந்தஞானத்திற்றோன்றிய வாசனையழிவதே முத்தியென்பதாம். ஞானங்கூடக் கெடுதல் முத்தியென்பாருமுளர். இப்புத்தமதத்தர் மாத்தியமிகன் யோகாசாரன் சௌத்திராந்திகன் வைபாடிகனென நால்வகைப்படுவர். இந்நால்வரும், முறையே, எல்லாப் பொருளுஞ் சூனியமெனவும், புறப்பொருள் சூனியமெனவும், புறப்பொருளுண்மை வழியளவையானறியப்படுமெனவும், புறப்பொருள் காட்சிப்பொருளாமெனவுங் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்.

மாத்தியமிகன்.

இவருண் மாத்தியமிகராவார், உலகத்துப்பொருள்கள் உள்பொருளாயினழியா, இல்பொருளாயிற்றோன்றா, உள்ளவுமில்லவுமாமெனின் முரணும், இரண்டுமல்லவெனின் உணர்ச்சி கூடாவாகலின் இந்நான்கு பகுதியுமின்மையான் எல்லாப்பொருளுஞ் சூனியமே, மயக்கத்தாற் காட்சிப்பொருள்போலப் புலப்படுகின்றன என ஆசிரியன் பிடகநூலுணர்த்தியவழியதனை யுண்மையாகக்கொண்டு மேல்வினவாதார். ஆசிரியன் மொழிந்தது பொருளெனக் கோடலிற்றலைமாணாக்கர் அதற்குமேல் வினா நிகழ்த்தாமையிற் கடைமாணாக்கர் எனவிரண்டுமொருங்குற்று நின்றமையின் மத்தியமாணாக்கராய் மாத்தியமிகரெனப்பெயர் பெற்றாரென்பது.

யோகாசாரன்.

இனியோகாசாரராவார், அங்ஙனமாசிரியனுணர்த்தியவழிப் புறப்பொருள் பாழென்பதனையுடம்பட்டு ஞானமுமவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றேயென வினாயினார்க்கு நன்றே வினாயினீர் ஞானமாத்திரமுள்ளது. அந்தஞானஞ் சாகாரநிராகாரமென் றிருவகைப்படும், அவற்றுள் வட்டம் சதுரம் கறுப்பு சிவப்பு முதலியவடிவிற்றாய் அகத்தேதோன்று ஞானஞ் சாகாரமெனவும் பந்தநீங்கியவழியங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய்ப்பெருகுவதாகிய ஞானம் நிராகாரமெனவுங் கூறப்படும், இத்தன்மைத்தாகிய ஞானமேயன்றிப் பொருளென வேறில்லை, கனவின்கட் புறப்பொருளையவாவாது கேவலஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின்கண் வழங்குவது மவ்வாறேயாம், அவ்வுணர்வு அகத்தினிகழ்வதேயாயினும் அநாதிவாசனைவயத்தாற் புறத்தே காணப்படுவதுபோலத் தோன்றுகின்றதெனக்

கொள்க என்றாசிரியனுணர்த்தினான்; அங்ஙனமுணர்த்தப்பட்டோர். ஆசிரியன்மொழிந்ததனையுடன்பட்டு அதற்குமேல்வினாயினாராகலின் யோகாசாரரென்றாயினாரென்பது. புத்தமதவாசிரியன் மொழியுடம்படுதலையாசாரமெனவும் அதற்குமேல் வினாவுதலை யோகமெனவுங் குறியிட்டு வழங்குபவாகலானும் அவ்விரண்டானும் பெற்றபெயரென்றுணர்க.

சௌத்திராந்திகன்.

இனிச்சௌத்திராந்திகராவார்-அங்ஙனமாசிரியனுணர்த்தியவழிப்புறப்பொருண் முழுதுஞ் சூனியமென்பதென்னை யானிது கண்டேனென்றுணர்வுழி யானென்னும் ஞானம் அகத்துப்பொருளும் இதுவென்று சுட்டியறியப்படுவது புறத்துப்பொருளுமாகலான் அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டுமொருங்குணர்தலேபற்றி யொன்றென்றல்பொருந்தாமையானும், இரண்டுமொருங்குணர்தலெனவே வேறுபாடுண்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படமுதலியனவாகத் தோன்றாநின்றதெனக்கோடல் பொருத்தமன்றென வினாயினார்க்கு, நன்றே வினாயினீர் புறத்துத் தோன்றுவனவும் உள்பொருளேயாம், அவை காட்சிப்பொருளல்ல குடவடிவிற்றாகிய ஞானமுணர்ந்தபின்னன்றிக்குடமுணர்தல்கூடாமையின் கணத்திற் றோன்றியழியுங் குடமுதலாயின அங்ஙனமுணருங்காறு நிலைபெறுதலின்மையாற் குடமுதலாயின தத்தம்வடிவினை ஞானத்தின் வைத்திட்டழிந்தபின்னை ஞானத்துட்பற்றிய வடிவானே யங்ஙனமிறந்துபோய்க் குடமுதலாயின வழியளவையின் வைத்துணரப்படும். இவற்றிற்குக் காரணமென்னையெனிற் புறம் அகம் என்னும் இருவகைச்சமுதாயமாம். அவற்றுட் புறச்சமுதாயம் நிலமுதலாயின. அவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை நிலவணு நீரணு தீயணு வளியணுவென நால்வகைப்படும். அவை யொருங்கு பல தொக்கவழிப் புறச்சமுதாயந் தோன்றும். இனி அகச்சமுதாயம் சித்தமும் சித்தப்பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படுங் கந்தங்கள். அவை உருவம் வேதனை ஞானங் குறி வாசனை என்பனவாம். கந்தமென்பது சமூகமென்னும்பொருட்டு. அவற்றுட் சித்தத்தாற் சிந்திக்கப்படுஞ் சத்தமுதலாயின உருவக்கந்தம். இவை புறத்துள்ளனவாயினும் அகத்திற் சித்தத்தாற் சிந்திக்கப்படுதலின் அகச்சமுதாயத்துள்வைத்தெண்ணப்பட்டன. இனி அகச்சமுதாயத்துட்பட்ட உடல் பொறி முதலியவற்றை உருவக்கந்தமென்றலுமொன்று. அவ்வுருவக்கந்தத்தை யுணருமுணர்வு ஞானக்கந்தம்; அதுசாகார நிராகாரமென்னும் வேறுபாட்டாற் பிரவிருத்திவிஞ்ஞானமென்றும் ஆலயவிஞ்ஞானமென்றும் இருவகைப்படும். சாகாரஞ் சவிகற்பமாம். நிராகாரம் நிருவிகற்பமாம். இனியிவ்வுணர்வாற் றோன்றுமின்பத்துன்பநொதுமல்கள் வேதனைக்கந்தம். சாத்தன் கொற்றன் முதலிய பெயர் குறிக்கந்தம். அப்பெயர்களாற் பகுத்துணருஞ் சவிகற்பவுணர்வு குறிக்கந்தமெனவும் நிருவிகற்பமொன்றே ஞானக்கந்தமெனவுங் கோடலுமொன்று. அவற்றின் வாசனை வாசனைக்கந்தமாம். வாசனையெனினுஞ் செய்கையெனினுமொக்கும். குறியெனினுஞ் சஞ்ஞையெனினுமொக்கும்.

இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலான் அகச்சமுதாயந் தோன்றும். இவற்றுள் உருவக்கந்தம் புறச்சமுதாயத்துள்வைக்கப்படும், ஏனை நான்குமே சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயமென்பாருமுளர். சகமுழுதும் இவ்விருவகைச் சமுதாயத்துளடங்குமென் றாசிரியனுணர்த்தினான். அதுகேட்ட மாணாக்கர். இங்ஙனம் மாணாக்கர் வினாவிய கடாவிற்கேற்பவறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவுபெறுமெனக்கடாயினர். அவ்வழியாசிரியன் சூத்திராந்தங் கடாவிய நீர் சௌத்திராந்திகரெனப்பெயர் பெறுகவென்றமையின் அவர்க்கது பெயராயிற்று.

வைபாடிகன்.

இனி வைபாடிகராவார், ஆசிரியனிங்ஙனமுணர்த்தியவழி யது கேட்ட மாணாக்கர் புறப்பொருள் ஞானத்தாலநுமித்தறியற்பாற்றென்றதென்னை? ஞானமே தனக்குக் காட்சிப் பொருளாகலானும் காட்சிப்பொருளொன்றுமின்றாயின் வியாத்தியுணர்தற்கு இடமின்மையான் வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோளுரை போலுமெனக் கடாயினர்; ஆகலின் அவர் வைபாடிகரெனப்பட்டார். மாறுகோளுரையெனினும் விபாடையெனினுமொக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப்பொருளாமெனவும் ஆசிரியனுணர்த்தினான்.

இங்ஙனம் வினாயினர் கருத்துக்கேற்ப நால்வகைப்படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்கமுதலியவற்றை உடம்பட்டுக் கோடலானும் எல்லாரும் முறையானே முழுதுஞ் சூனியமென்று கோடற்குரியரென்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் வினாயினர் கருத்துக் கேற்ப ஆசிரியன் கூறிய விடைப்பொருளையுறுதியாகக் கோடலின் மதம் வேறுபட்டு நால்வராயினர். இங்ஙனம் புத்தமதநான்குங் கண்டுகொள்க.

[ஆருகதம்]

இனி ஆருகதமாவது- சீவனும் அசீவனும் ஆச்சிரவமும் சமுவரமும் நிச்சரமும் பந்தமும் வீடுமெனப் பதார்த்தங்களேழுள. இவற்றுட் சீவன் அநாதி சித்தனும் முத்தனும் பெத்தனுமென மூவகைப்படும். இவற்றுளநாதிசித்தன் அருகக்கடவுள். முத்தன் மோகமுதலிய பந்தத்தினீங்கினவன். பெத்தன் அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்தவுடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறாம். இனி அசீவன் புற்கலமும் ஆகாயமும் தன்மமும் அதன்மமும் என நான்கு வகைப்படும். அவற்றுள் உருவப்பொருளான நிலமுதலிய நாற்பெரும் பூதமும் மரம் புல்லு முதலிய நிலையியற்பொருளும் பை முட்டை முதலியவற்றிற் பிறக்குமியங்கியற் பொருளுமெனப் புற்கலமறுவகைப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். உலகாகாயமும் உலகங் கடந்த வாகாயமுமென ஆகாயமிருவகைப்படும். உலகங்களுக்குட் படுமாகாயம் உலகாகாயமெனவும் உலகங்கட்குப் புறத்தே யெல்லையின்றியுள்ளது உலகங்கடந்த வாகாயமெனவுமுணர்க. தன்மம்

புற்கலத்தின்வேறாய் நன்மையைப் பயப்பது. அதன்மம் தீமையைப் பயப்பது. அசீவபதார்த்தவகை நான்குமிங்ஙனம் கண்டுகொள்க. இவையெல்லாம் அத்திகாயமென்னும் வாய்பாடு கூட்டி வழங்கப்படும். இனி ஆச்சிரமமாவது பொறிவழிச்சேறல்; கன்மத்தொடர்ச்சியென்பாருமுளர். சமுவாமாவது அங்ஙனஞ் செல்லாமற்றடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்தினெறும்பு முதலியனசாவாது வழி நோக்கி மெல்ல வியங்குதலும் இனியவை கூறுதலும் நியமவுணவுமுதலாயினவாம். நிச்சரமாவது சுபோரையிற் கிடத்தல் தலைமயிர் பறித்தல் முதலிய தவம். பந்தமாவது இருப்புக்குடம்பை தன்னகப்பட்ட சுரைப்பழத்தை நீர் நிலையிற் கீழ்ச் செலுத்துமாறுபோலச் சீவனுடைய சுதந்திரத்தையடக்கிப் பிறவியிற் சுழல்விக்கும் மோகமுதலிய வெண்குணமுமாம். வீடாவது இருப்புக் குடம்பை தகர்ந்தவழிச் சுரைப்பழமேலெழுமாறுபோலச் சீவன் மோகமுதலிய வற்றினீங்கிச் சுதந்திரம் பெற்று உலகங் கடந்து எல்லையின்றியுளதாகிய ஆகாயத்தின்மேனோக்கியே சேறல். மேலெல்லைக்கணிருத்தல் முத்தியென்பாருமுளர். இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் அநேகாந்த வாதத்தாற் கூறப்படும். அஃதாவது உடம்பெடுத்தற்கு முன் சீவனுண்டோ வில்லையோவென்று வினவியவழி உண்டாம் இல்லையாம் உண்டு மில்லையுமாம் சொல்லொணாததாம் உண்டுமாம் சொல்லொணாததுமாம் இல்லையுமாம் சொல்லொணாததுமாம் உண்டுமில்லையுமாஞ் சொல்லொணாததுமாம் எனவெழுவகையானிறுத்தல். வினாயவையெல்லாம் இவ்வாறேயிறுக்கப்படும். ஆமென்பதீண்டுச் சற்றென்னும் பொருட்டாயதோரிடைச்சொல். சொல்லொணாததென்பது உளதுமிலதுமல்லாததென்னும் பொருட்டென்பது. எனவே உள்ளதும் இல்லதும் உளதிலதும் இரண்டுமிலதுமென நான்குபக்கமாய் இரண்டுமல்லதென்னும் பொருட்டாகிய சொல்லொணாததென்பதனோடு உள்ளதும் இல்லதும் உளதிலதும் என்னும் மூன்றுங் கூட்ட ஏழுபக்கமாயினவெனக் காண்க. பொருளியல்பு இவ்வெழுவகையுளொன்றாகச் சொல்லவும்படும் சொல்லவும்படாதென்பது கருத்தாகலின் முரணுமையுமறிக. இவ்வெழுவகையுள் ஒவ்வொன்றேபற்றிக் கூறும் ஏனைச்சமயத்தார் கோட்பாடெல்லா முள்ளடக்கிநிற்றலின் இங்ஙனம் அநேகாந்தவாதங் கூறுஞ்சமயமே மேற்பட்ட சமயமென்பது கருத்து. ஆருகதம் முடிந்தது.

இவருள் உலோகாயதன் காட்சிவாதியெனவும், புத்தன் கணபங்கவாதியெனவும், ஆருகதன் அநேகாந்தவாதியெனவும், புத்தருள்ளும் மாத்தியமிகன் சூனியவாதியெனவும், யோகாசாரன் விஞ்ஞானவாதியெனவும், ஏனையிருவருஞ் சமுதாயவாதிகளெனவும் உணர்க. இவ்வாறு புறப்புறச்சமயமாறுங் கண்டுகொள்க.

புறச்சமயம்.

[தருக்கம்.]

இனிப் புறச்சமயமாறனுள் தருக்கமாவது வைசேடிகமும் நையாயிகமுமென இருவகைப்படும். அவற்றுள் வைசேடிகநூலிற் கூறும் பொ

ருளாவன: திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மையெனப் பதார்த்தம் எழுவகைப்படும். இவற்றுட் டிரவியம் நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனமென ஒன்பது வகைப்படும். அவற்றுள் நிலமுதலிய நான்கும் அநித்தப்பொருள். அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயமுதலியவைந்தும் நித்தப்பொருள்கள். அவற்றுள் ஆகாயம் காலம் திசை மூன்றும் ஒரோவொன்றேயாய் வியாபகமாயுள்ளன. ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணிறந்தனவாம். மனம் அணுவளவிற்றாய் ஆன்மாக்கடோறும் வெவ்வேறாயிருக்கும். ஆன்மா பரமான்மா சீவான்மாவென விருவகைப்படும். பரமான்மா முற்றுணர்வுடையவன், எல்லாம் வல்லவன். அவன் இச்சைவசத்தானே உலகந் தோன்றி ஒடுங்கும். அவனாற் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவான்மாக்கள் சிற்றறிவினவாய் வினைக்கீடாகப் பிறந்திறந்து இன்பத்துன்பங்களை நுகர்வனவாம். ஆன்மாக்களுக்கு மனத்தோடு கூடாதவழி அறிவில்லை. இங்ஙனந் திரவியமொன்பதுங் கண்டுகொள்க. இனிக் குணங்களாவன திரவியம் பற்றுக்கோடாக நிகழ்வன. அவை உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்துநாலுவகைப்படும். அவற்றுட் புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவமென்னு மெட்டுக்குணமும் பாவனையென்னும் வாதனையும் சீவான்மாக்களுக்குச் சிறப்புக்குணங்கள். இவற்றுட் புத்தி விருப்பு முயற்சி மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக்குணங்கள். பரமான்மாவின் குணங்களாகிய புத்திமுதலிய மூன்றும் நித்தியம். சீவான்மாக்களின்புத்திமுதலியமூன்றும் அநித்தியம். ஏனையவுமோர்ந்துணர்க. தொழிலாவன எழும்பல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என ஐவகைப்படும். சாதியாவது பலபொருட்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரமென இருவகைப்படும். விசேடமாவது ஒவ்வொருபொருட்கே யுரிய தன்மை. அவை நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாயமுதலிய வைந்துமாகிய நித்தப்பொருள்களின் வேறுபாடுணர நிற்பனவாய்ப் பலவாம். சமவாயமாவது அவயவமுதலியவற்றிற்கு அவயவிமுதலியவற்றோடு நீக்கமின்றி யுள்ளதாகிய இயைபு. அஃதொன்றேயாம். இன்மையாவது முன்னின்மையும் அழிவுபாட்டின்மையும் என்றுமின்மையும் ஒன்றினொன்றின்மையுமென நான்குவகைப்படும். ஆக, இங்ஙனங்கூறு மெழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு பொதுவியல்பு வேற்றியல்புகளை யுணரவே உடம்புமுதலியவற்றின் வேறாகிய ஆன்மாவினியல்பு விளங்கும். விளங்கவே உடம்பு முதலியவற்றை நானென்றெண்ணிய மித்தையுணர்வு கழியும். அது கழியவே முயற்சியின்மையின் அறம்பாவங்களில்லையாய்ப் பிறவியொழியும். ஒழியவே வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின் உடம்பு முகந்துகொண்ட வினைப்பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மனத்தோடு கூடுதற் கேதுவின்மையின் அறிவின்றிப் பாஷாணம் போற் கிடப்பதே முத்தியென்பதாம். வைசேடிகநூல் செய்தவன் கணாத முனிவன்.

இனி நையாயிகமாவது வைசேடியநூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்திப் பிரமாணம் பிரமேய முதலாகப் பதினாறுவகையான்

விரித்துக் கூறுவதாம். நையாயிகநூல் செய்தவன் அக்கபாதமுனிவன். இங்ஙனமிருவகைப்படுந் தருக்கநூலார் சிலவற்றிற்குக் கணபங்கங் கூறுமாறாவது உண்டவுணவின்சாரமே அவயவங்களாய்ப் பரிணமித்துக் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வேறுபடுதலின் அவயவியாகிய உடம்பும் வளர்ந்துந் தேய்ந்துங் கணந்தோறும் பிறிது பிறிதாம். அங்ஙனங் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும், மழைத்தாரையானிறையும் பொய்கைநீரும் இறைப்பக் குறையுங் கூவனீரும்போல முடிவின்கட் காணப்படுதலிற் கணந்தோறும் வளர்தலுந் தேய்தலுமுடைமை பெற்றாம். இவ்வாறே மண்டோடுதல் பூரித்தல் முதலியவற்றால நிலமும் யாற்றுநீர்ப்பெருக்கு முதலியவற்றால் கடலும் கணந்தோறும் நிறைவு குறைவுடைமையான இன்னோரன்னவையெல்லாம் கணபங்கமாய்ப் பிறிதுபிறிது தோன்றுமெனக்கொள்வர். சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் தார்க்கீகரும் பரமாணுகாரணவாதிகளாயினும் அவருட் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் பரமாணுக்களொருங்கு பலதொக்குக் காரியமாமென்பர். தார்க்கீகர் அவ்வாறன்றி இறைவனிச்சைவயத்தாற் பரமாணுக்களிற் கிரியை தோன்றி இவ்விரண்டு பரமாணுக்கள் தம்மிற் சேர்ந்திரட்டையணுவாய் அவை மும்மூன்று தம்முட்சேர்ந்து மும்மையணுவாய் அவை நந்நான்கு தம்முட்சேர்ந்து நான்மையணுவாய் இவ்வாறே யொன்றற்கொன்று சினையு முதலுமாய் முறையே தோன்றிக் காரியப்படுமென்றும், ஒடுங்குங்காலு மிறைவனிச்சைவயத்தான் அம்முறையே யொடுங்குமென்றுங் கொள்வர். தார்க்கீகரும் சௌத்திராந்திகர் வைபாடிகரும் நிலவணு நீரணு தீயணு வளியணுவெனப் பரமாணுக்கள் நால்வகைப்படுமெனக் கொள்வர். சமணர் அவ்வாறு கொள்ளாது பரமாணுக்களெல்லாம் ஒரு தன்மையனவேயென்பர். இவை தம்முள் வேற்றுமை. இங்ஙனமாயினுந் தார்க்கீகர் வேதநெறியினொழுகி வேதத்திற்குப் பிரமாணங் கோடலிற் புறப்புறச்சமயிகளாகிய நாத்திகரோடு சேராது வைதீகருள் வைத்தெண்ணப் பட்டாரென்க. தார்க்கீகர் மதம் முடிந்தது.

(மீமாஞ்சை)

இனி மீமாஞ்சையாவது வேதத்திற் கருமகாண்டவாராய்ச்சி செய்தற்கெழுந்த நூலாகலின் அதுவும் வேதமெனப்படும். அது பன்னிரண்டத்தியாயமாகச் சைமினிமுனிவனாற் செய்யப்பட்டது. அந்நூல் கூறும் பொருளாவது: வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியே சுயம்புவாயுள்ளது; அங்ஙனமாகலின் வேதம் பிரமாணமெனப்படும். வேதத்துள்ளும் நீராடுக வேள்விசெய்க வழிபடுக என்றாற்போலத் தொழிற்படுத்துவனவாகிய சோதகவாக்கியங்களே பிரமாணமாம். உலகத்துச் சொற்பொருளுணரும் அவாவினராகிய இளையோர், ஆவினையாக்க மேதியை விடுக்கவெனவும் ஏவுமுதியோன் கூறுமொழிகேட்டும், அதுபற்றி யியற்றுமுதியோன் செய்யுந் தொழிலினைக் கண்டும், பின்பு மேதியை யாக்க ஆவினை விடுக்கவென மாறிக்கூறியவழி அங்ஙனஞ் செய்யுந் தொழிலினைக் கண்டும், இச்

சொற்கிதுபொருள் இச்சொற்கிதுபொருளெனவும் இங்ஙனஞ் சொற்பொருளெல்லாந் தொழிற்படுத்துஞ் சொல்லானே உணர்தற்பாலனவெனவு முணர்ந்துகொள்வாராகலின், வேதத்தினும் அவ்வாறு தொழிற்படுத்துஞ் சொற்களே பொருள்விளக்கிப் பிரமாணமாமென்பது தெளியப்படும். அங்ஙனமன்றி உலகந் தோன்றி யொடுங்குமென்றும் தோற்றியொடுக்குதற்கோரிறைவனுண்டென்றும் இந்திரன்முதலிய கடவுளருளரென்றும் அவர் இவ்வியல்பினரென்றும் பொருளியல்புகூறும் வாக்கியங்கள் பிரமாணமாகாவாயினும், அவை தொழிற்படுத்துவனவாகிய சோதகவாக்கியங்கட்குப் புனைந்துரைவகையால் உபகாரமாதல்பற்றிப் பிரமாணமெனக்கொள்ளப்படும். இந்திராயசுவாகா வருணாயசுவாகா என்றாற்போலும் வேதமந்திரங்களும் பொருளுடையவல்லவாயினும் விதிவாக்கியங்கட்கு உபகாரமாதல்பற்றிப் பிரமாணமெனப்படும். சோதிட்டோமம் பரிமேதமென்றாற்போலும் வேள்விப்பெயர்களும் வேள்விகளின் வேறுபாடுமுதலிய வுணரநிற்றலின் பிரமாணமாம். இங்ஙனம் வேதத்தின் விதிவாக்கியமல்லாதனவும் ஒருவாற்றான் விதிக்குபகாரப்படுதல்பற்றிப் பிரமாணமென உபசரித்துக்கொள்ளப்படும். வேதமெல்லாம் இங்ஙனம் விதியும் புனைந்துரையும் மந்திரமும் குறியீடுமென நான்குவகைப்படும். இவற்றுள் விதி அங்கியும் ஏனைமூன்றும் விதிக்கங்கமுமாம். விதிவாக்கியம் விதித்தலும் விலக்குதலுமென விருவகைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும் அறமும் பாவமுமென இருவகைத்து. ஆன்மாவை யறிகவென விதித்தலின் ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்ப் பிறந்திறந்து வினைசெய்து வினைப்பயன்களை நுகர்ந்துவரும். வினைசெய்தவர்க்கு வினையே துறக்கமுதலிய பயன்களையுதவும். காமியப்பயன் குறித்து வினைசெய்யின் அவ்வப் பயன்களையுதவும். காமியம் வேண்டாது விலக்கியனவுமொழித்து வேள்விகள் செய்யின் அவ்வினை முத்தியையுதவும். இவ்வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா வொருவன் உண்டென்பதூஉம் உலகந் தோன்றி யழியுமென்பதூஉம் பொய். உலகம் என்றுமிவ்வாறே நிலைபெறுமென்பதாம். இங்ஙனஞ் செய்யப்பட்ட சைமினி சூத்திரங்கட்குப் பாடியஞ்செய்தான் சபரமுனிவன். சூத்திரத்திற்கும் பாடியத்திற்கும் சிறுபான்மை வேறுபாடுகொண்டு பட்டாசாரியன் சூத்திரமதம்பற்றி வழிநூல்செய்தான். பட்டன் மாணாக்கனாகிய பிரபாகரன் பாடியமதம்பற்றி வழிநூல்செய்தான். இங்ஙனமாகலின் மீமாஞ்சைமத மிருவகைப்பட்டது. பட்டாசாரியன் கன்மமே பயன் கொடுக்குமென்றும் முத்தியில் நையாயிகர்போல் ஆனந்தமுண்டென்றுங் கொள்வன். பிரபாகரன் கன்மநாசத்தின் அபூருவமெனவொன்று தோன்றிநின்று பயன்கொடுக்குமென்றும் வைசேடிகர்போலப் பாடாணம்போற் கிடப்பதே முத்தியென்றுங் கூறுவன். பொருட்டன்மைகளினுஞ் சிறுபான்மை பட்டாசாரியனில் வேறுபடக்கூறுவன். பிரபாகரமதமெனினுங் குருமதமெனினு மொக்கும். மீமாஞ்சைநூல் பன்னிரண்டத்தியாயத்துள் முதலத்தியாய முதற்பாதத்திற் கருமங்களுக்கு நேரே பிரமாணமான விதிவாக்கியங்கட்குப் பிரமாணமில்லையென வாதிகள்கூறுஞ் சங்கைகளை மறுத்து வேதம் சுயம்புவாகலிற் பிரமாணமாமென்றும், இரண்டாம்பாதத்திற் புனைந்து

ரைவாக்கியங்களும் மந்திரங்களுமாகியவிரண்டும் விதிக்கு வேண்டப்படுந் திரவியங்களும் துதிகளும் முதலியவற்றைத் தெரிவித்தலிற் பிரமாணமாமென்றும், மூன்றாம்பாதத்தின் வேதத்தோடு முரணாது மனுமுதலிய வான்றோராற் செய்யப்பட்ட மிருதிமுதலியவற்றிற்கு மூலவேத முண்டென்று வழியளவையா னுணரப்படுதலின் அவை பிரமாணமாமென்றும், நாலாம்பாதத்தின் விதிவாக்கியத்தில் அகப்பட்ட வேள்விப்பெயர்கள் கருமவேறுபாடும் மாட்டேற்றும் அநுவாதமும் முதலியன வுணரநிற்றலானும் கருமத்திற்குப் பெயராதலானும் பிரமாணமாமென்றும், இவ்வாறு பிரமாணமாமாறுணர்த்துதலிற் பிரமாணவியலென்னும் பெயர்த்து. இரண்டாமத்தியாயம் அங்ஙனம் பிரமாணமாகிய வேதத்திற் பெறப்பட்ட கருமங்கள் வேதவாக்கியங்களிற் கூறும் பகுதி வினை வேறுபடுதலும் ஒருவினை பலகாற் கூறுதலும் தொகை கூறுதலும் வேறுவேறு குறியிடுதலும் குணவேறுபாடு கூறுதலும் வேறு பிரகரணத்திற் கூறுதலுமாகிய விவற்றான் ஒன்றற்கொன்று வேறுபாடுடைமை தெரிவித்தலிற் கருமபேதவியலென்னும் பெயர்த்து. மூன்றாமத்தியாயம் அங்ஙனம் பலவேறுவகைப்பட்ட கருமங்கட்குச் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணம் தானம் குறியீடு என்னுமிவற்றானே இதற்கிது அங்கமெனவும் இது அங்கியெனவும் அங்கமு மங்கியுமாமுறைமை கூறுதலின் அங்காங்கியியலென்னும் பெயர்த்து. தலைமைப்பொருள் அங்கியுந் தலைமையில்பொருள் அங்கமுமெனக்கொள்க. சுருதிமுதலியவற்றுட் சுருதியாவது வேறொன்றனை யவாவாது தான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது. அது விதிக்குஞ்சொல்லும் குறியீட்டுச்சொல்லும் விவகரிக்குஞ் சொல்லுமென மூவகைப்படும். இலிங்கமாவது ஆற்றலாற் பொருளையுணர்த்துவது. அது சொல்லாற்றலும் பொருளாற்றலுமென விருவகைப்படும்: ஒருமந்திரத்தின் வருந் தொழில்பற்றி அத்தொழினிகழுங் கருமத்திற் கம்மந்திர மங்கமென்பது சொல்லாற்றலாற் பெறப்படும். அவியினைக் கருவியாற் சுருவத்தாற் கையால் வாங்குகவெனப் பொதுப்படக் கூறியவழிக் கருவியிறைச்சிக்குஞ் சுருவம் நெகிழ்ந்தபொருட்கும் கை புரோடாச முதலியவற்றிற்கும் அங்கமென்பது பொருளாற்றலாற் பெறப்படும். வாக்கியமாவது இங்ஙனஞ் சுருதியு மிலிங்கமுமின்றிச் சொற்றொடர்பற்றி யுணரவருவது. பிரகரணமாவது சோதிட்டோமம் வேட்கவென்றாற்போலும் விதிவாக்கியங்களாற் பொதுப்பட வுணர்ந்து சிறப்பானறியப்படாத கன்மங்களான் அவாவப்பட் டிவ்வாறு செய்யற்பாற்றென வகுத்துக்கூறுவது. அது பெரும் பிரகரணமென்றும் இடைக்கட்பட்ட பிரகரணமென்றும் இருவகைப்படும். தானமாவது நிரனிறையிடமும் அண்மையிடமுமென இருவகைப்படும். அவற்றுளண்மை சொல்லினண்மையு மநுட்டானத்தினண்மையுமென விருவகைத்து. குறியீடாவது காரணத்தான் வரும்பெயர். அது வேதமரபுபற்றிய பெயரும் உலகமரபுபற்றிய பெயரும் என விருவகைப்படும். இவ்வாறு சுருதிமுதலியவற்றி னியல்புணர்ந்துகொள்க. நாலாமத்தியாயம் இங்ஙன மங்கமு மங்கியுமாகிய கன்மங்களை யனுட்டிப்பிக்கும் பிரயோகமாமது கூறுதலிற் பிரயோகவியலென்னும்பெயர்த்து. அங்கம் பிழைத்தவழி அங்கியின்பொருட்டு வேறங்கம்

வேண்டப்படும், அங்கி பிழைத்தவழி அங்கத்தின்பொருட்டு வேறங்கி வேண்டப்படுவதின்று, அங்கம் பிழைத்தவழி அதற்கங்கி பலவுளவாயின யாதொன்றற் கங்கமாயே மற்றொன்றற் கங்கமாம் அதன்பொருட்டே வேறங்கம் வேண்டப்படும் மற்றொன்றன்பொருட்டு வேண்டப்படுவதின்று என்றாற்போலத் தெரிவிப்பது பிரயோகமுறையென்க. அஞ்சாமத்தியாயம் ஒருபிரயோகத்துட்பட்ட வங்காங்கிகளை யநுட்டிக்கு முற்பிற்பாட்டு முறைமையைச் சுருதிமுறைமை பொருண்முறைமை பாடமுறைமை முதலியன பற்றித் தெரிவித்தலின் முறைமைப்பாட்டியலென்னும் பெயர்த்து. இங்ஙன மிரண்டாவதில் உற்பத்திவிதியா னறியப்படுங் கன்மபேதமும், மூன்றாவதில் உபகரிக்கும் விதியான் அறியப்படும் அங்காங்கியியல்பும், நான்கினும் ஐந்தினும் பிரயோகிக்கப்படுவனவற்றின் விதியானறியப்படும் பிரயோகமும் முறைமைப்பாடுந் தெரித்துணர்த்தியபின், ஆறாமத்தியாயம் பயன் கூறுமுகத்தான் அதிகாரிகளாவாரைத் தெரிவித்தலிற் பயனியலென்னும் பெயர்த்து; அதிகாரவியலெனினுமாம். இங்ஙனம் நால்வகைப்படும் எடுத்தோத்துவிதிகளை ஆராயுமாறு ஆறத்தியாயத்துள் உணர்த்தி மேலேழாவது முதற் பத்தாவ திறுவாய் நான்கத்தியாயங்களான் மாட்டேற்றுவிதி யாராயுமாறுணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்யற்பாற்றென எடுத்தோதுவது எடுத்தோத்துவிதியெனவும் அதுபோலச் செய்கவெனமாட்டெறிவது மாட்டேற்றுவிதியெனவு முணர்க. அவற்றுள் ஏழாமத்தியாயம் அதுபோலச் செய்கவென்னும் வசனத்தானும் அங்ஙனம் வசனமில்லவற்றிற்கும் பெயர் ஒருமையானும் அதுவுமில்லவற்றிற்கு இதுசெய்கவென விதித்தலானது செய்யுமாறு யாதானுமொன்றனோடு மாட்டெறியும் வசனமுண்டென வழியளவையா னுணரப்படும் விதியானும் மாட்டெறியுமாறுணர்த்தி எட்டாமத்தியாயம் அங்ஙனம் பொதுப்பட வழியளவையா னுணரப்படுவனவற்றுள் எதுபோலெது செய்யப்படுமென் றவாயவழிச் சொல்லொப்புமை பொருளொப்புமைபற்றி இன்னதுபோ லின்னது செய்யப்படுமெனத் தெரித் தெடுத்துணர்த்துதலின் ஏழாவது மெட்டாவதும் மாட்டேற்றியலென்னும் பெயரினவாம். ஒன்பதாமத்தியாயம் அங்ஙனம் மாட்டெறிந்தமைபற்றிப் பகுதிப்பொருளிற் செய்யுங் காரியம் விகுதிப்பொருளிற் செய்வழிப் பகுதியிற் கூறும் மந்திரமும் சாமமுந் தொழிலும் விகுதிப்பொருளுக்கேற்ப வேறுபடக்கொள்ளுந் திறநியாயம்பற்றி யூகிக்குமாறுணர்த்துதலின் ஊகவியலென்னும் பெயர்த்து. பத்தாமத்தியாயம் அங்ஙன மூகித்தபின்னர் மாட்டெறிந்தவற்றுள் ஆண்டைக்குரியனவாகாதவற்றை நியாயம்பற்றி விலக்குமாறுணர்த்துதலின் விலக்கியலென்னும் பெயர்த்து. இங்ஙனம் பத்தத்தியாயத்தினும் எடுத்தோத்துவிதியினும் மாட்டேற்றுவிதியினுந் தெரித் துணர்த்தவேண்டியவற்றைத் தெரித் துணர்த்தியபின்னர் ஏனையிரண்டத்தியாயத்தினும் இவ்விருவகைக்கும் பொதுவாகிய தந்திரமும் பிரசங்கமு மாமாறுணர்த்துதலின், பதினோராமத்தியாயந் தந்திரவியலென்னும் பெயர்த்து; பன்னிரண்டாமத்தியாயம் பிரசங்கவியலென்னும் பெயர்த்து. தந்திரமாவது கருமஞ் செய்யுங்காற் றலைமைவினை பலவுளவாய ஒருதேசமும் ஒருகாலமும் ஒருகருத்தாவுமாயவழி அவற்றிற்கெல்லாம் பொதுப்பட அங்கவனுட்டானம்.

ஒருகாற் செய்பவமையுமென்றாற்போல்வது. அங்ஙனமன்றி மறித்து ஞ் செய்யற்பாலதாதலே யபாவமென்பர். பிரசங்கமாவது முதற்கண்வ ந்த வாசிரியன் அமுதுசெய்தற்கட்ட வறுசுவையடிசில் ஆசிரியனையன்றி யும் ஒருதலையானங்ஙனமட்டிடுதற்குரியனைப் பின்பு வந்த மருகனுக்கு முபகாரமாதல்போல, ஒன்றன்பொருட்டுச் செய்த வினை மற்றொன்றற்கு முபகாரமாதல். ஆசிரியனுக்கட்டவடிசில் ஆசிரியனுடன் வந்தவர்க்குமுப காரமாதல் பிரசங்கமன்றென்பது. மீமாஞ்சைநூலிற் பன்னிரண்டத்தி யாயமு நுதலிய பொருள் இங்ஙனந் தொகுத்துணர்த்தப்பட்டது. இவற் றிற்குதாரணம் விரிப்பிற் பெருகும். நையாயிகநூலிற் கூறுந் தருக்கமும் மீமாஞ்சைநூலிற் கூறும் நியாயங்களும் எல்லாநூல்கட்கு முபகாரமாமென க்கொள்க. மீமாஞ்சைமதம் முடிந்தது.

ஏகான்மவாதம்.

ஏகான்மவாதமாவது மாயாவாதமும் பாற்கரியவாதமும் கிரீடாப்பி ரமவாதமும் சத்தப்பிரமவாதமுமென நான்கு வகைப்படும். அவற்றுண் மாயவாதமாவது சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரம ம். பரமார்த்தத்திலே சத்தொன்றே மெய்ப்பொருள்; ஏனையவெல்லாம் பி ரமத்தின் விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவ்விச்சையினாற் கா ணப்படுவனவாகலிற் பொய். இங்ஙனம் தோன்று மூலகத்திற்கு முதற்கா ரணமாகிய மாயை, பிரமம்போலச் சத்துமன்றி முயற்கோடுபோல அசத் துமன்றி அநிருவசனமாயிருக்கும். அநிருவசனமென்பது சொல்லொணா தென்னும்பொருட்டு. இந்த மாயைக்கு வேறாகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தாலறிவதே முத்தியென்பதாம்.

பாற்கரியவாதமாவது முன்கூறப்பட்ட பிரமமே சட்முஞ் சித்துமா கிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட் டமையை அறியாமையினாற் பந்தமாயிற்று. பரமார்த்தத்திலொருபொருளே. வேதாந்தஞானத்தான் உடம்பிற்கு வேறாகியவான்மரூபம் விளங்கும். அது வே பரப்பிரமமென்றறிந்து அதன்கணிலயித்தலே முத்தியென்பதாம்.

கிரீடாப்பிரமவாதமாவது முன்கூறப்பட்ட பிரமமே நான். யான் ஒ ருபடித்தன்றிப் பலவேறுவகைப்பட்ட விகாரப்பொருள்களோடு கூடிப் ப லவாற்றால் விளையாடுகின்றேனென்று இவ்வாறறிவதே முத்தியென்பதாம்.

சத்தப்பிரமவாதமாவது காரணமாகிய பரப்பிரமம் இறுதிக்காலத்தி ற் சத்தவடிவிற்றாயிருக்கும். அஃதவிச்சையினாற் சட்முஞ் சித்துமாயவுலக ங்களாய் விரியும். முடிவின்கட் சத்தமாத்திரையே யுள்ளது என்றிங்ஙன மறிவதே முத்தியென்பதாம். இங்ஙனம் நால்வேறுவகைப்பட்ட ஏகான்ம வாதநூல் செய்தவன் வியாதமுனிவன்.

(சாங்கியமதம்)

இனிச் சாங்கியமதமாவது, மூலப்பகுதி நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப்பொருட்குங் காரணமாய் முக்குணங்களுமொப்பநின்ற வவதாரமாய் அருவாயுள்ளது. இஃதிருபத்துநாலாந்தத்துவம். இதன்கட் டோன்றுங் காரியம் புத்திமுதனிலமீறான இருபத்துமூன்றுதத்துவமுள. இ த்தத்துவமிருபத்துநான்கிற்கும் வேறாய் நித்தமாய் வியாபகமாய் அருவாய்

பலசாங்கியமாய் அறிவதுஞ் செய்வதுமின்றி அறிவுமாத்திரமாய் ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமின்றி நிற்குமான்மாக்கள் இருபத்தைந்தாந் தத்துவமெனப்படும். இவ்விருபத்தைந்தாந் தத்துவமாகிய புருடன் முத்தியினும் பெத்தத்தும் ஒருதன்மையனேயாம். புருடனுக்கு மலினமென்பதில்லை. தாமரையிலைநீர்போலொட்டற்று நிற்பன். அநாதியே புத்தியைச் சார்ந்தவவிச்சைவயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத்துன்பவுணர்வு தோன்றுகின்றது. புத்தியாவது மூலப்பகுதியின் பரிணாமம்; அதுவே மானென்றும் அந்தக்கரணமென்றுங் கூறப்படும். அது பொறிவழியான் ஞானமாய்ப் பரிணமித்து விடயத்திற் செல்லும் புருடன் செய்வானென்பதும் புத்தியறியுமென்பதும் வேற்றுமையுணராமையானென்பது மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணரவே அவ்விச்சை நீங்கும்; அதுவே முத்தியெனப்படும். ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவனொருவனுண்டென்பது பொய்யென்பதாம். இந்நூல் செய்தவன் கபிலமுனிவன். இதனுட் கூறுஞ் சற்காரியவாதம் சைவமுதலிய சற்காரியவாதநூல்கட்கெல்லாம் உபகாரமாம். இதனுட் கூறுமத்தியாசவாதம் மாயாவாதத்துக்கு உபகாரமாம். சாங்கியமுடிந்தது.

(யோகமதம்.)

யோகமாவது நிலமுதற் புருடனீறாகிய இருபத்தைந்து தத்துவமும் பெத்தமுத்திகளும் நீதிக்கேதுவாம். இருபத்தாறாந் தத்துவம் இறைவனொருவனுளன், அவன், முற்றுணர்வுடையனாய்ச் சாத்திரங்களையருளிச்செய்து புருடருக்கு ஞானத்தை யறிவுறுப்பனாகலின், இவ்வான்மாக்களுக்கு வேறென்றுணரப்படுமென்பதாம். இந்நூல் செய்தவன் பதஞ்சலிமுனிவன். யோகமதம் முடிந்தது.

(பாஞ்சராத்திரமதம்.)

இனிப் பாஞ்சராத்திரமதமாவது இருபத்துநாலாந் தத்துவமாகிய குணதத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்றொருவனுளன். அவனே பரம்பொருள். அவனிடத்தினின்றும் சண்ணனும் அநிருத்தனும் மகரத்துவசனும் ரௌகிணேயனும் என நால்வர் உலகங்களைப் படைத்தற்பொருட்டுத் தோன்றினர். இந்த நால்வகை வியூகங்களாற் சடமுஞ் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டனவாதலால், எல்லாம் வாசுதேவன் பரிணாமமேயாம். இங்ஙனம் கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களினுறுதிப்பயனுண்டாகாது. ஆதலாற் பாஞ்சராத்திரமுறையே தீக்ஷை பெற்று வாசுதேவனை வழிபட்டு வாசுதேவனுருவின் இலயமாதலே முத்தியென்பதாம். இந்நூல் செய்தவன் வாசுதேவனென்க.

இவ்வாறு புறச்சமயமாறுங் கண்டுகொள்க.

அகப்புறச்சமயம்.

(பாசுபதம்.)

இனி அகப்புறச்சமயமாறனுட் பாசுபதமாவது ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரியகாரணக் கூட்டரவாற் றோன்றும் ஞானத்தாற் றனித்தனி வேறாயுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவமலமென்பதொன்று இல்லை. மாயை கன்மமென்றிரண்டாற் பந்தமுற்று இன்பத்துன்பங்களை யனுபவிக்கும். இவற்றினுவர்ப்புத்தோன்றிச் சாத்திரமுறையானே தீக்ஷை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப்பற்று

ம். அப்போது, குடும்பத்தின் பாரம் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார்போல, ஈசனுந் தன்னுடைய குணங்களை யவன்பாற் பற்றுவித்துத் தானதிகாரத்தினொழிவுபெற்றிருப்பன் என்பதாம்.

(மாவிரதம்.)

மாவிரதமாவது மேற்கூறிப்போந்த இயல்பையுடைய ஆன்மாக்கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களை யனுபவிக்கும். சாத்திரத்திற் கூறு முறையே தீக்ஷைபெற்று எலும்புமாலையணிதன் முதலிய சரியைகளின் வழுவாதொழுகினவர் முத்தராவார். முத்தருக்குச் சிவனோடு சமமான எல்லாக் குணங்களும் உற்பத்தியாம் என்பதாம்.

(காபாலம்.)

காபாலமாவது ஆன்மாக்களியல்பும் பந்தவியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே தீக்ஷைபெற்றுப் பச்சைக்கொடியொன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலைபோட்டின் ஐயமேற்றுண்பவர், உன்மத்தராய்ச் சிவனுவேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பதாம். இம்மூவரும், முறையே சங்கிராந்தசமவாதி எனவும், உற்பத்திவாதியெனவும், ஆவேசவாதியெனவுமுணர்க. இம்மூன்றுமதமுஞ் செய்தார் முறையே மாயை வித்தை காலமென்னுந் தத்துவங்களின் வைகும் உருத்திரர் மூவரெனக் கொள்க.

(வாமம்.)

இனி வாமமதமாவது பாற்கரியன் கூறியவாறே சட்முஞ் சித்துமாயவனைத்துலகும் சத்தியின் பரிணாமமே. வாமநூலின் விதித்த முறையொழுகிச் சத்தியின் இலயித்தலே முத்தியென்பதாம். இந்நூல் செய்தார் சித்தபுருடர் சத்திதத்துவத்தின் வைகும் ஓரான்மாவாற் செய்யப்பட்டது சுத்தசாத்தமென்றறிக.

(வைரவம்.)

இனி வைரவமதமாவது பெரும்பாலும் வாமமதத்தோடொத்துச் சிறுபான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருளெனக் கொண்டு வைரவபதத்திற் சேர்வதே முத்தியென்பதாம்.

(அபிக்கவாதசைவம்.)

இனி அபிக்கவாதசைவமாவது "இன்மைமல மாயைகன்ம மென்றிரண்டே யிறைதானிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின் - றன்மைகளா லவர்களுக்குந் தனுகரண புவனந் தந்திடுமிங் கிதனாலேயிருபயனுஞ் சார்ந்து - கன்மமெல்லா நேராக நேராதன் மருவக் கடவுளருளாலெவையுங் கழிந்திடுவனதனாற் - பின்மலமா னவையனுகா பெருமொளிமுன்பமுதே பெற்றிடும்" என்பதாம்.

இவ்வாறு அகப்புறச்சமயமாறுங் கண்டுகொள்க. காளாமுகம் சாம்பவமுதலியனவும் இவற்றின் பகுதியாயடங்கும்.

இனிப் பாடாணவாதமுதலிய அகச்சமயங்களாறின் கருத்துஞ் சங்கற்பநிராகரணத்தின் விரித்தோதியவாற்றானறிக. ஈண்டும் வந்துழி வந்துழிக் காட்டுதும். ஈண்டுக் கூறாத சமயங்களும், கூறியவற்றின் பகுதியாய் இவற்றுள்ளேயடங்கும். அஃதறிந்தடக்கிக்கொள்க.

உ

முதற்சூத்திரம்.

ஈண்டு வடமொழிச் சிவஞானபோதத்துட் கூறியவாறே பொதுவுண்மையென் றிரண்டதிகாரமாகப் பகுத்துக்கொண்டு, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயனென நான்கு திறத்தாற் பொருளியல்புரைப்பான் எடுத்துக்கொண்டவாசிரியர், அவற்றுண் முப்பொருளின் வைத்து முதற்கட் பதியுண்மைக்குப் பிரமாணங் கூறும் முதற்சூத்திரத்துக்கு வார்த்திகமாகிய பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்துச் செய்கின்றார்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.

என்பது சூத்திரம்.

இங்ஙனம் பாட்டை மொழிபெயர்த்துக்கொண்டு இனி அதன் கருத்துரைக்கின்றார்.

சங்காரகாரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகமென்பதுணர்த்துதனுதலிற்று. எனவரும்.

சங்காரமைவகைப்படும். அவற்றுள் முதலது நிவிர்த்திகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இரண்டாவது பிரதிட்டாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; மூன்றாவது வித்தியாகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; நான்காவது சாந்திகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இறுதியது சாந்தியதீதகலையிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம். அவற்றுள் ஈண்டைக்கேற்புடையது இறுதிக்கண்ணதாகலின் ஈண்டுச் சங்காரகாரணனென்றது சுத்த மாயாபுவனந் தஞ் சங்கரிக்குஞ் சங்காரகாரணனாகிய பரமசிவனை. அயன்மாலொடுங் கூட்க குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதிபுவனந்தஞ் சங்கரிக்குங் குணிருத்திரனையன்றெனவுணர்க. என்னை? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்காரகாரணன் அன்மையானும், பரமசிவன் இலயபோகவதிகாரமென்னு மூன்றவத்தையினும் முறையே அருவம் அருவுருவம் உருவம் என்னும் மூன்றுதிருமேனிகொண்டு, சத்தன் உத்தியுத்தன் பிரவிருத்தன் எனவுஞ் சிவன் சதாசிவன் மகேசனெனவும்பெயர்பெற்றுநிற்பனென்றும், இங்ஙனந் தொழிலான் வேறுபட்டதன்றிப் பொருளான் வேறுபாடில்லையெ

ன்றும், பசுவர்க்கத்திற் பிரளயாகலரில் பக்குவமுடையவன் ஸ்ரீகண்டருத்திரனென்று சைவாகமங்களெல்லாமோதுதலின் மகேசுரமூர்த்தியிருவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவம் ஏனையவை அன்னவல்லவென்பது பெறப்படுதலானும், என்பது. இவ்வேறுபாடுணர்த்தற்கன்றே பொதுப்படச் சங்காரகாரணனையென்றொழியாது சங்காரகாரணனாயுள்ள முதலையென விதந்தோதியதூஉமென்க. இவ்வேறுபாடுணராது மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்தெண்ணுவோரை நோக்கி "நம்மவரே மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டுமண்மேற்- றேவரென் றேயிறுமாந்தென்ன பாவந் திரிதவரே" என வாதவூரடிகளிரங்கிக் கூறிய திருவாக்குமறிக. இன்னும் "தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர் - மூவராய் நின்ற தோரார்" எ-ம். "தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர் - நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காணீரு - மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னு - மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே." எ-ம். "மாவையுரித்ததள்கொண் டங்கமணிந்தவனை வஞ்சர்மனத்திறையு நெஞ்சனு காதவனை - மூவருருத்தனதா மூலமுதற்கருவை." எ - ம். "வரிவாயமலரானும்வையந் தன்னையுரிதாயளந்தானுமுள்ளுதற்கரியானு மறியாதகள்ளின்மேயான பெரியானென்றறிவார்கள்பேசுவாரே." எ-ம். "படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை." எ-ம். "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை - மூவர்கோ னாய்நின்ற முதல்வன்." எ-ம். "முந்துநடுவுமுடிவுமாகியமூவரறியாச்-சிந்துரச்சேவடியானை." எ-ம். "முந்தியமுதனடுவிறுதியுமானாய்-மூவருமறிகிலர்." எ-ம். "அரியாகிக்காப்பானயனாய்ப்படைப்பானரனாயழிப்பானுந்தானே." எ-ம். "வீரனயனரியாருமறியாவகையெங்களீசர்பரிசுகளே." எ-ம். வருந் திருவாக்குக்களானு மோர்ந்துணர்க. இதுவே சுருதி மிருதி புராணமிதிகாசமெல்லாவற்றிற்குங் கருத்தென்பது,சிவதத்துவவிவேகமுடையார் குறுதீதனென்னுஞ் சுலோகத்திற் கடாவிடைகளான் விரித்துக் காட்டியவாற்றானறிக. இங்ஙனமாயினும், ஸ்ரீகண்டருத்திரன் அயன்மால்போலச் சகலரிலன்றிப் பிரளயாகலர்களிற் பக்குவமுடையோனாய்க் கட்டுநீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக்குரிய எல்லாப் பெயர்களும் வடிவமுந் தொழிலும் பெற்றுடையவனாகலானும், சைவாகமங்களையறிவுறுக்குங் குரவனாகலானும், அயன்மாலிருவர்க்கு மேலாய்ச் சைவத்தினெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவுளாயினனென்க.

இங்ஙனம் கருத்துரைத்துக் கண்ணழித்துரைப்பான் புகுந்து ஈண்டு முதற்கண் உரைவகையாமாறுணர்த்துகின்றார்.

இதன்பொழிப்பு உரைத்துக்கொள்க எனவரும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண்ணழித்துரைக்குமுறைபற்றி உரைத்துக்கொள்கவென்றவாறு. எனவே, பொழிப்புரை

இங்ஙனமிருவகைப்படும். அவற்றுட் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரை மாத்திரையே யாமீண்டுரைக்கின்றாம். பிண்டமாகக் கொண்டுரைக்கும் பொழிப்புரை இதுபற்றி உணர்ந்துகோடலாமாகலின், அஃதியாமுரைக்கின்றிலமென மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று. இங்ஙனம் பொழிப்புரையிருவகைப்படுமென்பது "பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப் - பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே." எ-ம். "பாடங் கண்ணழிவுதாரண மென்றிவை - நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே." எ-ம். ஓதியவாற்றானறிக. இஃதேனைச் சூத்திரங்களினு முய்த்துணர்தற்பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது. பிண்டப்பொருளெனினுமொக்கும். உரைத்துக்கொள்கவென்புழிக் கொள்ளென்பது தற்பொருட்டுப் பொருட்கண் வந்த விகுதி பகுதியோடியைதற்குரிய துச்சாரியை பெற்று உரைத்துக்கொள்ளென நின்றவழி அதுவும் பகுதித்தன்மைப்பட்டு மேல்வரும் வியங்கோள் விகுதிபெற்றுத் தமக்குப் பொருள் இனிது விளங்குதற்பொருட்டு உரைக்கவென்னும் பொருளாய் நின்றது. இது சூத்திரவிருத்தியுள் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க. இங்ஙனம் ஆசிரியராணைதந்தமையிற் கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்துக்குப் பதப்பொருள் கூறுதும்.

அவனவளது—என்மனார் புலவர் என்பது ஆண்பெண்ணலியென்றாற்போலும் உலகத்தொகுதி,தோற்றநிலையிறுதியென்னு முத்தொழிலுடைமையான், ஒருவனாற் றோற்றப்பட்டு நின்றுள்ளதேயாம். அற்றேல், அஃதியாவனினுளதாமெனிற் றானொடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே யொழியாது மீளவுளதாவதெதனாலெனில், சகசமான ஆணவமலந் தீர்ந்தொடுங்காமையால் உளதாம். இங்ஙனமாகலிற் சங்காரத்தொழிலைச் செய்யுங் கடவுளே முதற்கடவுளென்று கூறுவர் அறிவுடையோர் என்றவாறு.

எனுமென்பது இடைச்சொல்டியாகப் பிறந்த பெயரெச்சமாய் இவ்வாறென்னும் பொருள் குறித்து நின்றது. வடமொழி முதற்சூத்திரத்தின் ஆதியென்றதும் அப்பொருட்டு. அவையென்பது தொகுதி. அஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயரெனக் கொள்ளின், உளவெனப் பிரித்துப் பயனிலையாக்கித் தானென்பது அசையாகக் கொள்க. வினைமை-வினையுடைமை. உடைமை - உடைத்தாந்தன்மை.

அவ்வக்காலத்தன்றி மூவினையும் ஒருகாலத்துப் படுதல் கண்டிலமென்பாரை நோக்கித் தன்மையின் வைத்தோதினார். தோற்றியவெனப் பிறவினைவாய்பாட்டானோதுதலின், அதற்குரிய வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. தோற்றியவென்புழிப் படுசொற் றொக்குநின்றது; "இல்வாழ்வான்" என்புழிப்போல. திதிப்படுமுலகத்தைத் திதியெனவும் அந்தத்தைச் செய்யுங் கடவுளை அந்தமெனவும் உபசரித்தார். காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், தோற்றியதிதியேயொடுங்கியுளதாமென உலகின்மேல் வைத்துக் கூறினார். சங்கார

காரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்திவ்வுலகமென்றதும் இக்கருத்தேபற்றியென்க. தோற்றுவானொருவனுளன் அவன் ஒடுக்கியுளதாக்குவனெனக் கடவுளின்மேல் வைத்தோதிய வடமொழிச்சூத்திரத்திற்குந் தாற்பரியமிதுவேயெனக் கொள்க. ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர். ஒடுங்கியென்புழி இன்னுருபும் மலத்தென்புழி ஆறனுருபுந் தொக்குநின்றன. ஆமென்பதனை முன்னுங் கூட்டுக. என்மனாரென்பது செய்யுண்முடிபாயதோர் ஆரீற்று முற்றுச்சொல். மன் எதிர்காலவிடைநிலை. அது "உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரையானுமறிக. ஈண்டுப் புலவரென்றது அளவையினியல்புணர்ந்தாரை. இதனுள், அவனவளதுவெனுமவைமூவினைமையின் என்பதோரதிகரணம், தோற்றியதிதியேயொடுங்கியுளதாம் என்பதோரதிகரணம், அந்தமாதியென்பதோரதிகரணம். ஆக மூன்றதிகரணத்ததிச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும் ஒன்றற்கொன்று முறையே ஏதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வருதலின், ஒருசூத்திரத்தாற் கூறினார். வருஞ் சூத்திரங்களினும் இவ்வாறே கண்டுகொள்க. தன்னாற் கூறப்படும் பொருளும் அதன்கணையப்பாடும் அதற்குப் பிறர்கூறும் பக்கமும் அதனை மறுத்துக் கூறுஞ் சித்தாந்தத்துணிபும் இயைபும் என்னுமிவற்றிற்கு நிலைக்களம் ஈண்டதிகரணமெனப்படும். அவற்றுள், இயைபு நூலியைபும் அதிகாரவியைபும் ஓத்தியைபும் பாதவியைபும் அதிகரணவியைபும் எனவைவகைப்படும். அவையெல்லாமாண்டாண்டுக் காட்டுதும்.

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது மேற் கருத்தாவினுண்மை சாதித்தற்பொருட்டு உலகிற்கு முத்தொழிலுண்மை சாதித்தல்.

உலகம் முத்தொழிலுடைத்து என்பதாம்.

அதற்கவை உளவோ இல்வோவென்று இரட்டுறத் தோன்றுமையப்பாடு ஈண்டு மீமாஞ்சைநூலாரும் உலோகாயதநூலாரும் உலகந் தோன்றுதலுமழிதலுமின்றி என்றுமிவ்வாறே நிலைபெறுவதாகலின் உலகங் காரியப்பொருளாமெனவும், எனவே இதுகொண்டு கருத்தாவுண்மை சாதித்தல் முயல்கோடுடைத்து ஆளிவயிற்றுப்பிறத்தலான் என்பதனோடொக்குமெனவுங் கூறுவர். அவருண் மீமாஞ்சைநூலார் வருமாறுவது, உலகந்தோன்றிநின்றழியுமென்பது காட்சியளவையாற் பெறப்படுவதன்று; அவினாபாவமாகிய ஏதுக்காணாமையின், வழியளவையாற் பெறப்படுவதுமன்று. வேதத்துட் கூறப்படுதலாற் பெறுதுமெனின், வேதத்தில் நடாத்துக நிறுவுக செய்கவென்றாற்போலத் தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளுணரும் வேட்கையாளர்க்கு அங்ஙனமேவுவோர் சொற்கேட்டு இயற்றுவோர் செய்யுந்தொழிலானே அவ்வச்சொற்பொருளுணரநிற்றலிற் பிரமாணமாம்; அவ்வாறன்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்களாற் சொற்பொருளுணரப்படாமையின் அவைபிரமாணமாகாவாயினும், தொழிற்படுத்தும் வாக்கியங்கட் கியாதானுமொருவாற்றான் உபகாரமாதலுடைமையா

ன் உபசரித்துப் பிரமாணமெனக்கொள்ளப்படுமாகலான், அதுபற்றி உரையளவையாற் பெறப்படுமென்பதுமின்றாகலான் உலகிற்கு முத்தொழிலுண்மை பெறப்பட்டாதென்பதாம்.

ஈண்டு உளதாயொருவனொருத்தியொன்றென்று 'சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது. எனவரும்.

எனவே, உலகந் தோன்றிநின்றழியும், அவனவ்ளதுவென்றிவ்வாறு பகுக்கப்படும் அவயவப்பகுப்புடைமையின், ஆடைபோலுமென்னும் அனுமானத்தானே மூவினையுடைமை துணியப்படுமென்பதாயிற்று. சொற்பொருளுணர்ச்சி தொழிற்படுத்துஞ் சொன்மாத்திரையானே துணியப்படுமென்னும்வரையறையின்றித் தாய் தந்தை முதலியோர் இச்சொற்கு இதுபொருள் இச்சொற்கு இதுபொருள் எனத் தெரிவித்தலானும் நிகண்டுநூலானுந் துணியப்படுமாகலின், அதுபற்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமல்லவென்றலின் மூன்றனுள் வைத்து முதற்கண் என்பதாம். அவயவப்பகுப்புடைமையான் முத்தொழிலுடைமை துணியப்படுமென்றுணர்த்துவார், ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமெனச் சூத்திரத்திறுேதியவாறே உடம்பொடுபுணர்த் தோதினாரென்க. பொருந்தாமையின் உரையளவையே பிரமாணமென்றோத லமையுமாயினும், அவர் மதமேபற்றி யவரை மறுத்தற்பொருட்டு மூவினையுடைமையும் வழியளவையாற் சாதித்தார். ஈண்டவயவமென்றது, ஆடையினேகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படு நூல்கள்போல ஒரு பொருளினேகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படுந் தகுதியுடையவற்றை. நில மலை கடன் முதலியவற்றின் ஏகதேசமாகிய மண் சிலை நீர் முதலியன தொடுதல் போழ்தல் முகத்தல் முதலிய தொழில்களானே தனித்தனி பிரித்தற்குரியவாமாறு காண்க. சிவ ஆணவமலத்தி னேகதேசத்தை நீக்கிக் கிரியையையெழுப்புமெனவும், பரமசிவன் சுத்தமாயையினேகதேசத்தைக் கலக்கிச் சுத்ததத்துவங்களைத் தோற்றுவிப்பனெனவும், அநந்ததேவன் அசுத்தமாயையினேகதேசத்தைக் கலக்கிக் கலைமுதலியவற்றைத் தோற்றுவிப்பனெனவும் வழங்குவதுபற்றி அவயவமெனப்படா; வேறுவேறு பிரித்தற்குரியனவன்மையின். இவற்றை நீக்குதற்கன்றே, ஒருபொருளினேகதேசமென்றொழியாது வேறுவேறு பிரித்தற்குரியன அவயவமென்றதூஉமென்க. இங்ஙனமாயினும், தார்க்கிகர்மதத்திற் பரமாணுக்கள் அவயவமுடையனவல்லவாகலான் அவை தோன்றிநின்றழியுமென்பது பெறப்படாமையின், அவயவமுடைமை காரியப்பாட்டிற்கு ஏதுவென்றல் யாண்டுஞ் செல்லாதாலெனின், அற்றன்று: அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவனவெல்லாந் தோன்றியழியுமென்பது கருத்தாகக்கொள்க. இன்னுழை கதிரின் றுன்னணுக்களே பரமாணுக்களாம். அவற்றை மும்மையணுவெனக்கொண்டு அவற்றினும் நுண்

ணியவாய்க் கட்புலனுகாதன உளவென்றற்குப் பிரமாணமின்மையின் ப
ரமாணுக்களும் அவயவமுடையனவேயாம். அல்லவெனக் கொள்ளினும்,
அவை சடமுமாய்ப் பலவுமாகலாற் ருேன்றி நின்று அழிவனவேயாமென்
க. ஆணவமலம் சடமாயினும் பலவன்று, ஆன்மாக்கள் பலவாயினுஞ் சட
மல்ல. ஆகலான் அவற்றின்கட்செல்லாமையறிக. இங்ஙனமாயினும், மா
யை சுத்தமாயை அசுத்தமாயையென இரண்டாய்ச் சடமுமாகலான் அ
வை காரியப்பொருளாவான் செல்லும். அவை தனித்தனி யொன்றேயா
மெனிற் குடமுதலியனவுந் தனித்தனி யொன்றேயாகலாற் பலவாதல் யா
ண்டையதென்பதாய் முடியுமாலோவெனின், அற்றன்று. அவனென்றும்
அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சுட்டி அறியப்படுவனவெல்
லாம் தோன்றிநின்று அழியுமென்பதே சித்தாந்த முடிபெனக்கொள்க.
இது விளங்குதற்பொருட்டன்றே, ஆண் பெண் அலியென்ருதல் ஒருவ
ன் ஒருத்தியொன்றென்ருதல் ஓதாது, அவனவளதுவெனச் சுட்டுப்பெ
யர்களானேதியதூஉமென்க. இதற்கிதுவே பொருளாத லுணர்த்துதற்க
ன்றே ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமெனவுரை
செய்து எடுத்துக்கொண்டதூஉமென்க. "அசத்தாஞ்சுட்டி யுணர்பொருளா
னவெல்லாம்" "அறிவினலறிந்தயாவு மசத்தாதலறிதி" என்னுந் திருவா
க்குக்களானும் இதுவேயிதற்குச் சிறந்த ஏதுவாதல் கண்டுகொள்க. அற்
றேல், அவனேதானே எனவும் அவனிவனுய் நின்ற முறை எனவும், அவ
னிவனனது எனவும், அதுநீயானுய் எனவும், பாவிக்கச்சொல்லுவது என
வும், நித்தப்பொருள்களுஞ் சுட்டியறியப்படுமாலோவெனின்,—அற்றன்று.
அவையங்ஙனம் பொதுமையிற் சுட்டியறியப்படுமாயினும் அநுபவநிலையிற்
சுட்டியறியப்படாவென்பது, "உரையுணர்விறந்துநின்றுணர்வதோருணர்
வே" எ-ம். "அறிவிறந்தங்கறிந்திடீர்." எ-ம். "பாவனையிறந்துநின்றுபா
விக்கப்படுவதாகும்." எ-ம். "ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பு
ங் - கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டாம்" எ-ம். "எதக்களானுமெ
டுத்தமொழியானுமிக்குச்சாதிக்கவேண்டா" எ-ம். ஓதுவனவற்ருலறிக.
பிரபஞ்சமவ்வாறன்றிச் சிறப்பியல்புபற்றி அநுபவமாயுண்மையாற் சுட்டப்
படுமென்னுங் கருத்தானன்றே, ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்ப
ட்ட பிரபஞ்சமென்ருெழியாது, உளதாயென விசேடித்ததூஉமென்க. நித்
தப்பொருள் சுட்டியறியப்படாதென்பது ஆருஞ்சூத்திரத்திற் காண்க.

இங்ஙனம் வழியளவையானே உலகந் தோன்றிநின்றழியுமெனச்
சாதித்து மீமாஞ்சைநூலாரை மறுத்தவழி, உலோகாயதநூலார் காட்சியள
வையொன்றே பிரமாணமன்றி வழியளவை முதலியன பிரமாணமல்லவா
கலான் அவற்ருற் சாதிப்பன பொருள்படாவாமென்பர். வழியளவையின்
ருயின், மேல்வரும் பயனைக் குறித்து முயற்சி செய்வாரில்லையாதல்வேண்டு
ம் "இம்மையின்முயற்சியாலேயிருநிதியீட்"டப்படுமென்பதே அவர் கொ
ள்கையாகலானும், வழியளவையும் அதுபற்றி உரையளவையும் பிரமாண
மெனக் காட்டியவழி யவருமதனுனே மறுக்கப்படுவாராயினும் அவர் மத

மேபற்றி யவஃர மறுத்தற்பொருட்டுத்தோன்றியழிதல் கண்கூடாகக் காட்டுவார் வேறுமோரேதுக் கூறுகின்றார்.

தோற்றமுமீறும் உள்ளதன்பாலே கிடத்தலின் எனவரும்.

வார்த்திகப் பொழிப்பாவது உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானும் செய்யப்படுமென்னும் வடமொழிமதம்பற்றி, கருத்துரையும் மேற்கோளும் ஏதுவும் உரைச்செய்யுளானுரைத்து, உதாரணம் பாச்செய்யுளானுரைக்கின்றார்.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதாரோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

எனவரும்.

இது முதலுந் துணையுங் காரணமாகக்கொண்டே திதி நிகழும் அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின், ஒவ்வொரு கால விசேடத்திற் சாதிபற்றி யொருங்கே தோன்றி ஒருங்கேநின்று ஒருங்கேயழிவதனைக் காண்டலால் என்றாயினும் அதற்குரிய காலமன்று உலகத்திற்கு மங்ஙனமாதலுண்டென்றொருங்கே நின்றொருங்கேயழிவதனைக் காணடலால் என்றாயினும் அதற்குரிய காலமன்று உலகத்திற்கு மங்ஙனமாதலுண்டென்று இக்காட்சிபற்றி யறியப்படுமென்பதாம்.

பூதாதி அன்மொழித்தொகை. பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க. அ[illegible]து முற்றுவினை. பெற்றிமையென்றது ஈண்டுச் சாதியை. ஓகாரம் எதிர்மறை. ஒன்றொன்றினென்பது ஒன்றொன்றாய்ப் பார்த்துணர்வதுள்ளமே என்புழிப்போல அடுக்குமொழி. கண்டும் உம்மை சிறப்பு. பெற்றிமையினொன்றொன்றிற் றோன்றி யுளதாயிறுதலாவது, "பயில்வித்தெல்லாங் காரிடமதனிற் காட்டுமங்குரங் கழியும் வேனில்" என்றதுபற்றி யுணர்ந்துகொள்க. இங்ஙனஞ் சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சமென்னுமிரண்டனுட் பொருட்பிரபஞ்சந் தோன்றிநின்றழியுமென்பது ஏதுக்களாற் சாதிக்கப்பட்டது.

இனி இரட்டுறமொழிதலான், அவனவளென்பதனாற் பெறப்படுமுயர்திணையும் அதுவென்பதனாற் பெறப்படுமஃறிணையுமென்னும் இருதிணைப்பகுதித்தாகிய சொற்பிரபஞ்சக் கூட்டம், இங்ஙனம் அவயவப்பகுப்புடைமையானும் சட்டுமாய்ப் பலவுமாகலானும், சுட்டியறியப்படுதலானும், திதியின்பால் வினையிரண்டுங் காணப்படுதலானும், தோன்றிநின்றழிதலுடை

த்தெனவும், பொருளுரைத்துக்கொள்க. அற்றேல், வேதம் நித்தியமென்னுஞ் சுருதிகளோடு முரணும் பிறவெனின்,- முரணாது; நித்தனாகிய பரமசிவனாற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரமசிவனிடத்தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்றுதலானும், நித்தமென்றுபசரித்துக் கூறப்படுமாகலின். சிவாகமங்களை நித்தமென்பதும் இக்கருத்தேபற்றியென்க. அங்ஙனமல்லாக்கால், வேதம் பரமசிவனாற் செய்யப்பட்டதென்னுஞ் சுருதிகளோடும் அட்டாதச வித்தைக்கு முதற்கருத்தாவாகிய இச்சூலபாணியென்றற்றொடக்கத்துப் புராணவசனங்களோடும் ஈண்டுக்கூறும் வழியளவையோடும் முரணுமாறறிக. வித்தை பதினெட்டாவன: இருக்குமுதலிய வேதநான்கும், சிக்ஷை கற்பசூத்திரம் வியாகரணம் நிருத்தம் சந்தோவிசிதி சோதிடமென்னும் அங்கமாறும், புராணம் நியாயநூல் மீமாஞ்சை மிருதியென்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவவேதம் அருத்தநூலென்னும் இருக்குமுதலியவற்றிற்கு உபவேதம் நான்கும் எனவிவை. இவற்றுள் வேதநான்கும் பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமுமுணர்த்துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாயடங்குமென்பர். வேதங்களை எடுத்தல் படுத்தல் முதலிய இசைவேறுபாட்டான் உச்சரிக்குமாறுணர்த்துவது சிக்ஷை. வேதங்களிற் கூறுங் கருமங்களையனுட்டிக்கு முறைமை யுணர்த்துவது கற்பசூத்திரம். வேதங்களின் எழுத்துச் சொற்பொருளியல்புணர்த்துவது வியாகரணம். வேதங்களின் சொற்பொருளுணர்விப்பது நிருத்தம். வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற் கெழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி. வேதத்திற் சொல்லப்படுங் கருமங்கள் செய்தற்குரிய காலவிசேடங்களை யுணர்த்துவது சோதிடம்: இங்ஙனமாகலின் இவையாறும், வேதத்திற்கங்கமெனப்பட்டன. பரமசிவன் உலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப்பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமுமீண்டடங்கும். வேதப்பொருளை நிச்சயி[illegible]லமான பிரமாண முதலியவற்றை யுணர்த்துவது நியாயநூல். வேதப்பொருளின் றாற்பரியமுணர்தற்கு அநுகூலமான நியாயங்களையாராய்ச்சிசெய்துணர்த்துவது மீமாஞ்சை. அது பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சையெனவும் வேதமெனவும் வேதாந்தமெனவும் வழங்கப்படும். அவ்வவ்வருணங்கட்கும் நிலைக்குமுரிய தருமங்களையுணர்த்துவது மிருதிநூல். புராணமுதலிய நான்கும் வேதத்திற்குபாங்கமெனப்படும். எல்லாமனுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச்செய்வது ஆயுள்வேதம். பகைவரானலிவின்றி உலகங் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை யுணர்த்துவது வில்வேதம். எல்லாக் கடவுளர்க்கும் உவகையைச் செய்யுமிசைமுதலியவற்றை யுணர்விப்பது காந்தருவவேதம். இம்மைக்கும் மறுமைக்குமேதுவாகிய பொருள்களை யீட்டுமுபாயமுணர்விப்பது அருத்தநூல். இவைநான்கும் உபவேதமெனப்படுமென்றுணர்க. முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்திற் பிரபஞ்சநித்தியமெனக்கொண்ட மீமாஞ்சைநூலாரையும் உலோகாயதநூலாரையு மறுத்துச் சொல்லும் பொருளுமென்றிருவகைப்பட்ட பிரபஞ்சம் உற்பத்திநாசமுடைத்தெனக் கருத்தாவினுண்மை சாதித்தற்கோதிய ஏதுவை ஏதுக்களாற் சாதித்தவழி, ஏதுவுண்டு சாத்தியமில்லையெனப் பிணங்கும் புத்தர் முதலியோரை மறுத்துச் சிறப்புப் பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருத்தாவுண்மை சாதித்தற்கெழுந்தது இரண்டாமதிகரணம். அதிகரணவியையும் இதனானே விளங்கும்.

இனியென்றது அதிகரணவியைபுணர்த்துதற்பொருட்டு. முன்வருமதிகரணங்களும் இவ்வாறே கண்டுகொள்க. சூத்திரத்தின் ஒடுங்கியெனா உலகவினைமேல் வைத்தமையின், அதற்கேற்ப ஈண்டுமொடுக்கினவென்னாது ஒடுங்கினவென உலகவினைமேல் வைத்துரைத்தார்.

ஒடுங்கின சங்காரத்தினல்லதுற்பத்தியில்லையென்றது, எனவரும்.

சங்காரகருத்தாவைச் சங்காரமென்றுபசரித்தார். அல்லதில்லையென எதிர்மறைமுகத்தாற் கூறினார், ஏனைக்கடவுளரிற் செல்லாமையறிவித்தற்பொருட்டு. அற்றேல். உலகமோரிடத்தொடுங்கி நின்று மீளவுண்டாமென்றதென்னை? உளதாயினுண்டாகவேண்டுவதில்லை யாகலான், இல்லதுண்டாம் உள்ளதழியும் இல்லவை தோன்றுங்காற் சந்தானமாய்க் கணந்தோறுந் தோன்றியழிவனவற்றுண் முதற்கணத்தினின்றழியும் பொருள் பிற்கணத்திற் றோன்றும் பொருட்குச் சார்பாகலின் அவை அவ்வச்சார்பிலே வித்தின்கேட்டினங்குரம்போற் றோன்றும், இதற்கொரு கருத்தா வேண்டுவதில்லையெனப் புத்தர் கூறுவர். அதனை மறுத்து மேற்கோளைச் சாதித்தற்கெழுந்தவேது.

இல்லதற்குத் தோற்றமின்மையின் எனவரும்.

அற்றேல் உள்ளதற்குண்டாகவேண்டுவதில்லை யாலோவென்னு மாசங்கை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கெடுத்துக்காட்டுமுதாரணம்.

இலயித்தன்னிலியித்ததாமலத்தா
விலயித்தவாறுளதாவேண்டும்.

எனவரும்.

உள்ளதற்கு உண்டாகவேண்டுவதென்னையென்னும் ஆசங்கையை நீக்குதற்கு இலயித்ததிலயித்ததன்னிலாமென்றும், அற்றேல், இலயித்ததிலயித்தவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டாம் வேண்டுமாயின் முன்னிலயித்தலின்றி நிலைபெறவே யமையுமென்னு மாசங்கையை நீக்குதற்கு மலத்தாலாமெனவும், நசித்தலேயன்றி ஒடுங்கிநின்று மீளவுண்டாமென்றற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி இலயித்தவாறுளதா வேண்டும் என்றுங் கூறினார். இலயித்தவாறன்றி உண்டாகாதென்னும் நியமமில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாயே நீளுதற் கேது வென்னை.